**விவசாயிடம் லஞ்சம் கேட்டு வாங்கிய வட்டாட்சியர், திருச்சி லஞ்ச ஒழிப்பு காவல் துறையினரால் கைது**

இவ்வழக்கின் புகார்தாரர் ஒரு விவசாயி, அவருக்கு மஞ்சம்பட்டியில், துவரங்குறிச்சி – செந்துரை செல்லும் சாலையில் உள்ள சுமார் 13 ஏக்கர் விவசாய நிலத்தினை ஒட்டினார்போல் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான மரங்களின் கிளைகள் தனது விவசாய நிலத்திற்கு மேலே செல்லும் மின்கம்பங்களின் கம்பிகளில் உரசிக்கொண்டிருந்துள்ளது. இதனால், பெரிய மின்விபத்து ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில், புகார்தாரர் மின் கம்பிகளில் உரசிக்கொண்டிருந்த மரங்களின் கிளைகளை ஆட்களை வைத்து கடந்த 25.9.2022 அன்று வெட்டியுள்ளார். மேற்படி மரங்களின் கிளைகளை வெட்டியது தொடர்பாக மருங்காபுரி தாசில்தார் திருமதி.லட்சுமி அவர்கள் அன்றே புகார்தாரரின் வீட்டிற்கு சென்று அவரை நேரில் சந்தித்து, புகார்தாரரிடம் என்னை கேட்காமல் மரங்களை எப்படி வெட்டலாம் என்று சத்தம் போட்டுள்ளார். அதற்கு புகார்தாரர் மின் விபத்து ஏதும் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் வெட்டியதாக தெரிவித்துள்ளார். அதற்கு தாசில்தார் திருமதி.லட்சுமி அவர்கள் அதெல்லாம் முடியாது, உங்கமேல போலீசுல புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்காம விடமோட்டேன் என்று மிரட்டியுள்ளார். அதற்கு புகார்தாரர் தெரியாமல் செய்துவிட்டதாக தெரிவித்து கெஞ்சியுள்ளார். அதற்கு தாசில்தார் லட்சுமி அவர்கள், புகார்தாரர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க 30 ஆயிரம் ரூபாய் லஞ்சப்பணத்துடன் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து தன்னை பார்க்குமாறு சொல்லிவிட்டு சென்றுள்ளார். பின்னர், புகார்தாரர் 01.10.2022 பிற்பகலில் மருங்காபுரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த தாசில்தார் திருமதி.லட்சுமியை சந்தித்துள்ளார். அப்போது தாசில்தார் லட்சுமி புகார்தாரரிடம் தான் கேட்ட ரூ.30 ஆயிரம் லஞ்சப்பணத்தை மீண்டும் கேட்டுள்ளார். அதற்கு புகார்தாரர் விவசாயம் ஒன்றும் சரியில்லாமல் ரொம்ப கஷ்டத்தில இருப்பதாகவும் அவ்வளவு பணம் கொடுக்க முடியாதும்மா என்றும் தெரிவித்துள்ளார். அதற்கு ரொம்ப புலம்பாதீங்க, பத்தாயிரம் கொடுத்தீங்கன்னா, உங்கமேல நடவடிக்கை எதுவும் இல்லாமல் பாத்துக்கொள்வதாகவும், இதற்குமேல் என்னால் குறைக்க முடியாது என்று சொல்லி, 03.10.2022 அன்று பணத்துடன் வந்து தன்னை சந்திக்குமாறும் தெரிவித்துள்ளார், அப்போது சரி என்று புகார்தாரர் சொல்லிவிட்டு, லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத புகார்தாரர், திருச்சி லஞ்ச ஒழிப்பு காவல்துறையினரிடம் இன்று (03.10.2022) புகார் மனுவை சமர்ப்பித்தார். இப்புகார்மனு சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு துறையினரின் ஆலோசனையின் பேரில் புகார்தாரர் மருங்காபுரி வட்டாட்சியர் திருமதி.லட்சுமி என்பவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது, புகார்தாரரிடம் தான் கேட்ட ரூ.10,000/– இரசாயனம் தடவப்பட்ட லஞ்ச பணத்தை பெறும்போது, மறைந்திருந்த திருச்சி, லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையிலான போலீசார் எதிரி திருமதி.லட்சுமி, வயது 56/2022, மருங்காபுரி வட்டாட்சியர், திருச்சி மாவட்டம் என்பவரை கைது செய்தனர்.